# QB365 Question Bank Software Study Material

## பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) பொருளாதார முன்னேற்றம் - வரையறு.

**பதில் :** பொருளாதார முன்னேற்றம் என்பது பின்தங்கிய நாடுகளின் சிக்கல்களைக் கொண்டதாகும். அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை ஒரு குறிப்பிட்ட நோக்கம் மற்றும் தேவையை அடைய பயன்படுத்தும் வழிமுறையைக் குறிக்கும்.

2) பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக.

**பதில் :** 1. நாட்டின் மொத்த உற்பத்தி

2. தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி

3. நலன்

4. சமூகக் குறியீடுகள்

3) பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.

**பதில் :**

| | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | வளர்ந்த நாடுகளின் பொருளாதாரச் சிக்கல்களைக் கையாளுகிறது | வளரும் நாடுகளின் சிக்கல்களைக் கையாளுகிறது. |
| 2 | அதிக அளவான உற்பத்தியைக் குறிக்கிறது. | உற்பத்தி அதிகரிப்பது மட்டுமல்லாமல் உற்பத்தியாகும் பொருட்களின் வகைகளும் மாறுகிறது. |
| 3. | குறுகிய எல்லையுடையது | விரிவான பொருள் கொண்ட சொல் முன்னேற்றம் = வளர்ச்சி + மாற்றம் |

4) மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

**பதில் :** ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் அங்காடி மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும், வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடுத் தொகையை கூட்டினால் கிடைக்கும் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி (GDP) எனலாம்.

5) பொருளாதாரத் திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.

**பதில் :** இராபின்ஸ் கூற்றுப்படி, “பொருளாதாரத் திட்டமிடல் என்பது தனியார் உற்பத்தி, வழங்கல் நடவடிக்கைகளைக் கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிப்பதாகும்”. (அல்லது) "பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும்" என்று டால்டன் கூறுகிறார்".

6) பொருளாதார முன்னேற்றத்தின் சமூகக் குறியீடுகளைப் பட்டியலிடுக.

**பதில் :** மக்களின் அடிப்படை தேவைகளையும் கூட்டுத் தேவையையும் நிறைவு செய்வதை சமூகக் குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் நலவாழ்வு, கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு, வீட்டு வசதி ஆகியவையாகும். இவற்றைக் கொண்டு சமூக பின்னடைவு தவிர்க்கப்படுகிறது.

7) நிதி ஆயோக் பற்றிக் குறிப்பு வரைக.

**பதில் :** National Institution for Transforming India (NITI) என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும்.
இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என புரிந்து கொள்ளலாம்.
இதனை 2014-ஆம் ஆண்டு ஆகஸ்ட்-13, திட்டக்குழுவுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை இந்திய அரசு எடுத்தது. இதன்படி ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது.

இந்திய பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர்.

8) மூலதன உருவாக்கம் என்றால் என்ன?

**பதில் :** ஏற்கனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமே மூலதன உருவாக்கம், இதில் கண்ணுக்குப் புலனாகக் கூடிய தொழிற்சாலைகள், இயந்திரங்களும், கண்ணுக்குப் புலனாகாத உடல் நலம், கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்றவை உள்ளடங்கும்.

9) விரிவான மற்றும் பகுதி திட்டமிடல் வேறுபடுத்துக.

**பதில் :** நாட்டின் அனைத்து பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டமிடல் விரிவான திட்டமிடலாகும். ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடைய தீட்டப்படும் திட்டம் பகுதி திட்டமாகும்.

10) சர்வாதிகாரத் திட்டமிடல் என்றால் என்ன?


**பதில் :** சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின் படி ஒரே ஒரு திட்டமாக இருக்கும்.

## 3 மதிப்பெண் வினாக்கள்

10 x 3 = 30

11) வறுமையின் நச்சுச் சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக.

**பதில் :** **வறுமையின் நச்சுச் சுழற்சி:** நச்சுச் சுழலானது ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று ஏழைநாடுகளை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும் விதத்தில் செயல்படுவதைக் குறிப்பாக ராக்னார் நர்க்ஸ் கூறுகிறார்.
வறுமையின் நச்சுச் சுழற்சி தேவைப் பக்கத்திலிருந்தும் அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.
அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது. இது முதலீட்டு அளவைக் குறையச் செய்து மூலதனப் பற்றாக்குறையை உருவாக்குகிறது. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து வருமானமும் குறைகிறது. இவ்வாறு அளிப்புப் பக்கத்தில் வறுமை நச்சுச் சுழற்சி செயல்படுகிறது.
தேவைப் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும். இது முதலீட்டைக் குறைக்கச் செய்யும், இதனால் மூலதன பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி குறைந்து வருமானத்தை குறைக்கும்.




12) பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?

**பதில் :** **பொருளாதாரம் சாராத காரணிகள்:**
1. மனித வளம்
2. தொழில்நுட்ப அறிவு
3. அரசியல் சுதந்திரம்
4. சமூக அமைப்பு
5. ஊழலற்ற நிருவாகம்
6. முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம்
7. நீதி போதனை, அறநெறியும் சமூக விழுமியங்களும்
சூதாட்ட முதலாளித்துவம்
8. பரம்பரைச் சொத்துரிமை முதலாளித்துவம்

13) வறுமை நச்சுச் சுழற்சியை எப்படித் தடுப்பது ?

**பதில் : வறுமையின் நச்சுச் சுழற்சியைத் தடுத்தல் :**

1. அளிப்புப் பக்கத்தில் வறுமையின் நச்சுச் சுழற்சி குறைவான சேமிப்பு மற்றும் குறைவான முதலீட்டினால் இயங்கத் துவங்குகிறது.
2. ஆகவே பின்தங்கிய நாடுகளில் முதலீட்டையும், மூலதன ஆக்கத்தையும் அதிகரிக்கும் போது நுகர்வு அளவு குறையாமல் இருக்க வேண்டும்
3. மேலும் கடந்த கால சராசரி சேமிப்பு விகிதத்தைவிட இறுதிநிலை சேமிப்பு அளவை அதிகரிக்கச் செய்யவேண்டும்.
4. தேவைப் பக்கத்தில் வறுமை நச்சுச் சுழற்சியை உடைத்தெரிய, நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியைப் பரிந்துரைக்கிறார்.
5. ஒவ்வொரு தொழிலிலும் வேலை கிடைத்த தொழிலாளர்கள் தங்களின் வருமானத்தை வேறு தொழிலிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்கும்போது சரிநிகர் சமமான முன்னேற்றம் நடைபெறும் என நர்க்ஸ் கூறுகிறார்.
6. எனவே அனைத்துத் தொழில்களின் சரிநிகர் சமமான வளர்ச்சியின் மூலம் தேவையின் பக்கத்தில் இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியைத் தடுக்க முடியும்.

14) இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் படிநிலை வளர்ச்சியை மதிப்பிடுக.

பதில் : இந்தியாவில் திட்டமிடுதலின் பரிணாம வளர்ச்சியை கீழ்கண்ட நிகழ்வுகளிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

**உயர்திரு. எம். விஸ்வேஸ்வரய்யா (1934):**

புகழ்பெற்ற பொறியியல் வல்லுநரும் அரசியல்வாதியுமான எம். விஸ்வேஸ்வரய்யா 1934ஆம் ஆண்டு இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார்.

அவர் தனது ஆலோசனையாகப் பத்தாண்டுத் திட்டமொன்றை அவர் எழுதிய “இந்திய பொருளாதாரத் திட்டமிடல்” எனும் புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

**ஜவஹர்லால் நேரு (1938):**

“தேசியத் திட்டக்குழு” ஒன்றை அமைத்தார்.

அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாகவும், இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்ததாலும் நேருவின் முயற்சிகள் நின்று விட்டன.

**பாம்பே திட்டம் (1940):**

மும்பையின் முன்னணித் தொழிலதிபர்கள் பாம்பே திட்டம் எனும் திட்டத்தை 1938ஆம் ஆண்டில் முன்மொழிந்தனர்.

இது பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமாகும்.

**எஸ்.என். அகர்வால் (1944) :**

இவர் "காந்தியத் திட்டம்" எனும் திட்டத்தை 1944 ஆம் ஆண்டில் வழங்கினார்.

இது வேளாண்மை, கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டமாகும்.

**எம்.என்.ராய் (1945):**

மக்கள் திட்டமான இத்திட்டம் வேளாண்மை உற்பத்தியையும் விநியோகத்தையும் இயந்திர மயமாக்குவதையும் நுகர்வுப் பொருட்களையும் அரசே வழங்கிட வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

**ஜெயப்பிரகாஷ் நாரயணன் (1950):**

'சர்வோதயத் திட்டம்' ஒன்றை முன்மொழிந்தார்.

இது காந்தியடிகள், வினோபா பாவே ஆகியோரின் கருத்துகளின் உத்வேகத்தால் தயாரிக்கப்பட்ட திட்டமாகும்.

15) திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி.

**பதில் : திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகள் :**

**நாட்டின் அங்காடிகளின் இயக்கத்தை முடுக்கி விடுதலும் உறுதியாக்குதலும் :** பின்தங்கிய நாடுகளில் அங்காடி சக்திகள் சரிவர இயங்காததற்கு அறியாமையும், பிரபலமும் இல்லாததே காரணம் ஆகும். எனவே, திட்டமிட்ட பொருளாதாரமே அங்காடிப் பொருளாதாரத்திற்கு சிறந்த மாற்றாகக் கருதப்படுகிறது.

**வேலையின்மையை அகற்றுதல் :** மூலதனக் குறைவும், தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஏற்படுவதால் அதிகரித்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலைவாய்ப்பை உருவாக்குவது அரசுகளுக்கு அறை கூவலாக உள்ளது. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மையையும் மறைமுக வேலையின்மையையும் அகற்றத் திட்டமிடுதல் அவசியமாகும்.

**சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்:** பொருளாதாரத்தின் பல துறை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமான பெரிய நிறுவனங்கள் இல்லாத சூழ்நிலையில் திட்டக்குழுவே சரிசம முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவும். பின்தங்கிய நாடுகளில் வேளாண்மை, தொழில், சமூகக் கட்டமைப்பு, உள்நாட்டு வாணிகம் பன்னாட்டு வாணிகம் ஆகியத் துறைகளின் முன்னேற்றம் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவாக நடைபெறத் தேவைப்படுகிறது.

**திட்டமிடல் வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும் :** திட்டமிடல் என்பது மட்டுமே பின்தங்கிய நாடுகள், நாட்டு வருமானம், தலா வருமானத்தை அதிகரிக்கவும், வறுமையையும், ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் செய்கிறது.

16) செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்குமிடையேயான வேறுபாடுகளை எழுதுக.

**பதில் :**

| | செயல்பாட்டுத் திட்டம் | அமைப்பு முறைத்திட்டம் |
|---|---|---|
| 1. | ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட திட்டம். | பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களைச் செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும். |
| 2. | வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல் பணிகள் திட்டமிடலாகும். | இவ்வகையான திட்டமிடல் பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளில் இது காணப்படுகிறது. |

17) நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?

**பதில் :** 1. கூட்டுறவும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சியும்
2. நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்
3. பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்
4. தொலைநோக்கும், காட்சித் திட்டமிடலும்
5. நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
6. உகந்ததாக்குதல்
7. சச்சரவுத் தீர்த்தல்
8. வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்
9. உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்
10. திறன் உருவாக்குதல்
11. கண்காணித்தலும் மதிப்பிடுதலும்

18) பொருளாதார முன்னேற்றத்தின் அணுகுமுறைகளை விளக்குக:

**பதில் :** 1. பழமையான அணுகுமுறை:
மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புடன் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பில் விவசாயத்தின் பங்கு குறைந்து தொழில் மற்றும் பணித்துறையின் பங்கு உயர்வடைதலையே பழைய அணுகுமுறையில் பொருளாதார முன்னேற்றம் என்கிறது
2. நலம் சார்ந்த புதிய அணுகுமுறை:
பொருளாதார முன்னேற்றம் 1970 களில் மறுவரையறை செய்யப்பட்டது. இதன்படி வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் வேலையின்மை குறைதல் மற்றும் நாட்டின் உள்நாட்டு உற்பத்தி அதிகப்படுத்துதல் ஆகியவை ஒரு சேர நிகழ்வதே பொருளாதார முன்னேற்றமாகும். "வளர்ச்சியுடன் கூடிய பங்கீடு" என்பதே புகழ்பெற்ற முழக்கங்களாயின.

19) பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றம் - வேறுபடுத்துக

**பதில் :**

| | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளை கையாளுகிறது | வளரும் நாடுகளின் பிரச்சனைகளைக் கையாளுகிறது |
| 2 | மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கிறது. | தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழ்கிறது |
| 3. | அதிக அளவான உற்பத்தியைக் குறிக்கிறது | உற்பத்தி அதிகரிப்பதும் மட்டுமல்லாமல் உற்பத்தியாகும் பொருட்களின் வகைகளும் மாறுகிறது |
| 4 | எண்ணிக்கை அடிப்படையிலானது. தலா வருமான அதிகரிப்பைக் குறிக்கும் | விரிவான பொருள் கொண்ட சொல் |
| 5 | குறுகிய எல்லையுடையது | விரிவான பொருள் கொண்ட சொல் |

20) வறுமையின் நச்சு சூழலின் அளிப்பு பக்கத்தை விவரி

**பதில் :** (i) வறுமையின் நச்சு சுழற்சி தேவைப் பக்கத்திலிருந்தும் அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது
(ii) அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது. இது முதலீட்டு அளவைக் குறையச் செய்து மூலதன பற்றாக்குறையை உருவாக்குகிறது. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து வருமானமும் குறைகிறது. இவ்வாறு அளிப்பு பக்கத்தில் வறுமை நச்சு சுழற்சி செயல்படுகிறது

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 5 x 5 = 25

21) பொருளாதார முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.

பதில் : **பொருளாதாரம் சார்ந்த காரணிகள் :**

**இயற்கை வளங்கள் :** ஒரு நாடு பெற்றுள்ள இயற்கை வளங்களின் அளவு அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணியாகும். முன்னேற்றத்திற்கு தேவைப்படும் அளவுக்கு ஒரு நாடு இயற்கை வளங்களை பெற்றிருக்க வேண்டும்.

**மூலதன உருவாக்கம் :** மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்துச் செயல்பாட்டிற்கும் அடிப்படையானதாகும். ஏற்கனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமே, மூலதன உருவாக்கம் என்பர்.

**சந்தையின் அளவு :** சந்தை அளவானது பெரிய அளவில் இருந்தால் கூடுதலான உற்பத்தி, அதிக வேலைவாய்ப்பு, தலா வருமானம் உயர்வு ஆகியவற்றைத் தூண்டி பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

**கட்டமைப்பு மாற்றம் :** கட்டமைப்பு மாற்றம் என்பது பொருளாதாரத்தில் தொழில் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும்.

**விற்பனைக்குரிய உபரி :** வேளாண் துறையில் குடும்பத்திற்கான நுகர்வுத் தேவையை விட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தியை விற்பனைக்குரிய உபரி என்கிறோம்.

**பன்னாட்டு வாணிகம் :** பன்னாட்டு வாணிகத்தில் சாதகமான சூழ்நிலை இருந்தால் ஒரு நாடு போதுமான அளவு அயல் நாட்டுச் செலவாணியைக் கையிருப்பில் வைக்க முடியும்.

**பொருளாதார அமைப்பு முறை :** ஒரு நாடு தடையில்லா பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தால் கட்டளைப் பொருளாதாரத்தைவிட வேகமான வளர்ச்சி பெறும்.

22) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி.

**பதில் : மக்களாட்சி முறைத்திட்டமிடலும் சர்வாதிகாரத் திட்டமிடலும் :**

திட்டங்களை தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல்.

சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாட்டின் படியும் வழிகாட்டுதலின் படியும் ஒரே ஒரு திட்டமாக இருக்கும். நுகர்வு, பரிமாற்றம், பகிர்வு ஆகிய அனைத்துமே அரசுக் கட்டுப்பாட்டிலிருக்கும்.

**மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலும் பரவ லாக்கப்பட்ட திட்டமிடலும் :**

மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில், அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலில் மைய அமைப்புகளின் கட்டுபாடுகளின்றி, உள்ளூர் அமைப்புகள், உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றைச் செய்யும். எனவே இதை 'கீழிருந்து திட்டமிடல்' எனவும் அழைக்கலாம்.

**வழிகாட்டும் திட்டமிடலும் தூண்டும் திட்டமிடலும்:**

திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தினால் அது வழிகாட்டுதல் திட்டமிடல் ஆகும்.

திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளைப் பல்வேறு நிதியியல் வழிமுறைகள் பணவியல் வழிமுறைகள் மூலம் ஊக்கங்கள் அளித்து, அதன் நடவடிக்கைகளை மக்களால் மேற்கொள்ளப்படுவதே தூண்டும் திட்டமிடல் என்கிறோம்.

**சுட்டிக்காட்டும் திட்டமிடலும் கட்டாயமானத் திட்டமிடலும் :**

திட்டக்குழு இலக்குகளை அடையும் வழிமுறைகளைக் குறிப்புரைகளாக தயாரித்தது, தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் பிற துறை நிபுணர்கள் ஆகியோரிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே சுட்டிக்காட்டும் திட்டமிடல் ஆகும்.

கண்டிப்பான திட்டமிடல் முறையில், திட்டம் தயாரித்தலிலும் மற்றும் செயல்படுத்துதலிலும் அரசு அதிகாரமிக்கது. திட்டம் தயாரித்து முடித்துவிட்டால் எவ்விதத் தடைகளுமின்றி திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்டகாலத் திட்டமிடல் :**

ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகிய காலத் திட்டங்களாகும். 'கட்டுப்படுத்தும் திட்டம்', 'ஆண்டுத் திட்டம்' எனவும் அறியப்படுகிறது.

மூன்றிலிருந்து ஏழு ஆண்டுக் காலத்தில் முடிவடையும் திட்டங்கள் நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும்.

பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல். இவை முன்னோக்குத் திட்டங்கள் எனவும் அழைக்கப் படுகின்றன.

**நிதித்திட்டமிடல், உருவப் பொருள் திட்டமிடல்:**

திட்டத்தை செயல்படுத்தத் தேவையான நிதியை பண மதிப்பில் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே நிதித்திட்டமிடலாகும்.

உருவப்பொருள் திட்டமிடல் என்பது மனித வளம், இயற்கை வளம், இயந்திரங்கள் முதலான பருமப் பொருட்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறையாகும்.

**பணிகள் திட்டமிடலும் கட்டமைப்புத் திட்டமிடலும்:**

ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார, சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல், பணிகள் திட்டமிடலாகும்.

பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களைச் செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும்.

**விரிவானத் திட்டமிடலும் பகுதித் திட்டமிடலும்:**

நாட்டின் அனைத்துப் பொருளாதாரச் சிக்கல்களையும் தீர்பதற்கானத் திட்டமிடல் விரிவான திட்டமிடலாகும்.
ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடையத் தீட்டப்படும் திட்டம் பகுதித் திட்டமாகும்.

23) திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்.

**பதில் : திட்டமிடலுக்கு எதிரான வாதங்கள் :**

அங்காடி இயங்காமல் தோல்வியடைந்ததால் அரசு திட்டமிடல் மூலம் தலையிடும் அவசியம் உருவானது.
திட்டமிடலுக்கு எதிராக வாதங்களையும் குறைகளையும் புரிந்து கொள்வோம்.

**தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை :**

தன் விருப்பம் போல் செயல்பட இயலாததால் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது.
திட்டமிடல் கட்டுப்பாடுகளையும் வழி முறை களையும் விதித்து நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ளது.
தலையிடாப் பொருளாதாரத்தில் நுகர்வு, பணியைத் தேர்வு செய்தல், உற்பத்தி செய்தல், விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் தன் விருப்பம்போல் முடிவெடுக்க அனுமதி உள்ளது.

**தன் முனைப்புக் குறைதல் :**

மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல், புதுமைகளைப் புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது.
தனியார் உரிமை இல்லாதது, இலாப நோக்கைக் குறைத்து தொழில் முனைவோர் திறம்பட முடிவு எடுப்பதையும், இடர் எதிர்நோக்குதலையும் குறைக்கிறது.
திட்டமிடல் பொருளாதாரத்தில் அனைவருக்கும் அவர்களது முயற்சி, திறமை மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.
உயர் பதவியில் உள்ள அலுவலர்கள் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தும் போக்குத் திட்டமிடலில் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது.

**அதிகமான நிருவாகச் செலவு:**

திட்டமிடலின் நோக்கமெனனவோ தொழில் மயமாக்கல், சமூகநீதி, நாட்டு நிலைமையைச் சமப்படுத்துதல் ஆகியன உயர்வானவை. ஆனால் அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகமாக இருக்கும்.
சரியான புள்ளிவிவரம் இல்லாமை, தவறாக கணிப்பது, திட்டமிடுதலை சரிவர செயல்படுத்துவது ஆகியவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்கு நிலைக்குக் கொண்டு செல்லும்.

**முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள் :**

அரசு தடையில்லாத நாட்டில், விலை இயக்க முறையில், விலை, தேவை மற்றும் அளிப்பு ஆகியவை தானாக இயங்கி ஒன்றையொன்று சரி செய்து கொள்கின்றன.
திட்டமிடல் நாடுகளில் இப்படி ஒரு வசதி இல்லை. நுகர்வும் உற்பத்தி அளவுகளைத் துல்லியமாக முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினம்.
நிலையான பொருளாதார முன்னேற்றத்தையும், சமூக, சமத்துவத்தையும் திட்டமிடுதல் மூலம் சாதிக்க முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

24) பொருளாதார முன்னேற்றத்தை அளவிடும் முறைகளை விவரி:

**பதில் : நாட்டின் மொத்த உற்பத்தி (GNP):**

ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டுத்த தொகையை கூட்டினால் வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்கும் கிடைக்கும் மொத்த மதிப்பே மொத்த நட்டு உற்பத்தி எனலாம். இந்த கருத்தினை கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார நிலையை மதிப்பிடலாம்

**தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி:**

இந்த அளவிடும் முறை நீண்டகாலத்தில் தலா உற்பத்தி மதிப்பு அதிகரித்தலைக் குறிப்பிடுகிறது. தலா வருமானம் அதிகரிக்கும் வேகத்தை விட உயர்வாக இருக்க வேண்டும் என இந்த அளவிடும் முறை வலியுறுத்துகிறது

**நலன்**:

பண்டங்கள் மற்றும் பணிகளை மக்கள் வாங்கி பயன்படுத்துவது அதிகரிப்பதையே பொருளாதார முன்னேற்றமாக கருதப்படுகிறது. மக்கள் நலன் என்ற கண்ணோட்டத்தில் பொருளாதார முன்னேற்றத்தை மக்களின் சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தகுந்த அளவு மேம்படுவதாக சார்ந்து வரையறுக்கலாம்

**சமூகக் குறியீடுகள்:**

மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவையை நிவர்த்தி செய்வதை சமூக குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு மற்றும் வீட்டு வசதி ஆகியவையாகும் இவற்றைக் கொண்டு சமூக பின்னடைவு தவிர்க்கப்படுகிறது.

25) பொருளாதாரத் திட்டமிடலும் ஆதரவான கருத்துக்களை விவரி

பதில் : **1. நாட்டுப் சந்தைகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதலும் உறுதியாக்குதலும்**

பின்தங்கிய நாடுகளில் சந்தை சக்திகள் சரிவர இயங்காததற்கு அறியாமையும், பிரபலமும் இல்லாததே ஆகும். நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் பணமாற்ற பரிமாற்றம் நடைபெறுகிறது. பொருட்கள், உற்பத்திக் காரணிகள், பணம் மற்றும் மூலதன அங்காடிகள் அமைப்புமுறை ஆகியவை ஒழுங்குற அமைக்கப்படவில்லை. எனவே, திட்டமிட்ட பொருளாதாரமே அங்காடிப் பொருளாதாரத்திற்கு சிறந்த மாற்றமாக கருதப்படுகிறது

**2. வேலையின்மை அகற்றுதல்:**

மூலதன குறைவும், தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஏற்படுவதால் அதிகரித்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலைவாய்ப்பை உருவாக்குவது அரசுகளுக்கு சவாலாக உள்ளது. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை மற்றும் மறைமுக வேலையின்மை அகற்ற திட்டமிடுதல் அவசியமாகும்

**3. சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்:**

பின்தங்கிய நாடுகளில் வேளாண்மை, தொழில், சமூகக் கட்டமைப்பு, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வணிகம் ஆகியத் துறைகளின் முன்னேற்றம் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவாக நடைபெற திட்டமிடல் தேவைப்படுகிறது.

1. வேளாண்துறை மற்றும் தொழில்துறை முன்னேற்றம்
2. கட்டமைப்பு முன்னேற்றம்
3. பண மற்றும் மூலதன அங்காடியின் முன்னேற்றம்

**4. திட்டமிடல் வறுமையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும்:**

திட்டமிடல் என்பது மட்டுமே பின்தங்கிய நாடுகள், நாட்டு வருமானம் மற்றும் தலா வருமானத்தை அதிகரிக்கவும், வறுமையும் ஏற்றத்தாழ்வுகளை குறைக்கவும் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் செய்கிறது